

# ஒரே சிந்தனை!



# ஒரே திட்டம்!



# ஒரே செயல்!

## வள்ளுவர் கோட்டம் எனும் பேரதிசயம்



தமிழ்நாட்டின் தலைநகரில் தமிழ் மொழி-பண்பாட்டின் அடையாளமாக வள்ளுவர் கோட்டத்தை உருவாக்கியவர் முத்தமிழறிஞர் கலைஞர். திருவாரூர் தேர் வடிவில் அமைக்கப்பட்ட வள்ளுவர் கோட்டத்தின் தேரில் திருவள்ளுவர் சிலை நிறுவப்பட்டது. திருக்குறளின் சிறப்பை விளக்கும் குறள் மண்டபம், ஒரே நேரத்தில் 2000 பேர் அமரக்கூடிய அரங்கம், திருக்குறள் ஆய்வு நிகழ்வுகள் என மிகச் சிறப்பான முறையில் வள்ளுவர் கோட்டத்தை உருவாக்கினார் முதலமைச்சர் கலைஞர். கோட்டத்தின் திறப்புவிழாவுக்காக தேதி குறிக்கப்பட்ட நிலையில், 1976 ஜனவரியில் தி.மு.க ஆட்சி ஜனநாயக விரோத முறையில் கலைக்கப்பட்டது. திறப்பு விழாவிற்கான அழைப்பிதழ் கூட கலைஞருக்கு முறைப்படி வழங்காமல் ஒன்றிய அரசு விழாவை நடத்தியது. ஒவ்வொரு கல்லாகப் பார்த்துப் பார்த்து அவர் வடிவமைத்த வள்ளுவர் கோட்டத்திற்கு முதலமைச்சராகத்தான் மீண்டும் செல்வேன் என சபதம் எடுத்தார் கலைஞர். எடுத்த சபதத்தை நிறைவேற்றும் வகையில் 1989ஆம் ஆண்டு மீண்டும் முதலமைச்சராக, வள்ளுவர் கோட்டத்தில் பதவியேற்பு விழாவை நடத்தி சபதத்தை நிறைவேற்றியவர் கலைஞர்.

## அண்ணா மேம்பாலம் முதல் அனைத்து வகை பாலங்களும்...




காலந்தோறும் வாகனங்களின் எண்ணிக்கை பெருகிக் கொண்டே இருக்கும். ஆட்சியில் இருப்பவர்கள் தொலை நோக்குப் பார்வையுடன் சாலை வசதிகளை மேம்படுத்த வேண்டும். முதலமைச்சர் பொறுப்பில் மிகச் சிறந்த நிர்வாகியாகத் திகழ்ந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தலைநகர் சென்னையின் போக்குவரத்து நெருக்கடியை எதிர்கொள்வதற்காக அண்ணா சாலையில் (பழைய மவுண்ட் ரோடு) கிரேடு செப்பரேட்டர் எனும் வகையிலான மேம்பாலத்தை அமைத்தார். ஒரு சாலையிலிருந்து இன்னொரு சாலைக்கு செல்வதற்கு வாகனங்கள் நெருக்கடியில் சிக்காமல், பாலத்தில் ஏறி அவரவர் செல்லும் திசைக்குப் பிரிந்து செல்லக்கூடிய வகையிலான இந்தப் பாலத்திற்கு அண்ணா மேம்பாலம் என்று பெயர் சூட்டினார். சென்னையின் இதயம் போன்ற பகுதியில் அமைந்த அண்ணா மேம்பாலம் 50 ஆண்டுகள் கடந்தும் போக்குவரத்து நெருக்கடியில்லாமல், வாகனங்கள் விரைந்து செல்ல வசதியாக அமைந்துள்ளது. கோவையிலும் இதே போன்ற மேம்பாலத்தை அமைத்த கலைஞர், நெல்லையில் போக்குவரத்து நெருக்கடியைக் குறைக்க ஈரடுக்கு மேம்பாலத்தை கட்டினார். காவிரி ஆற்றின் குறுக்கே குளித்தலைக்கும் முசிறிக்கும் இடையிலான ஒன்றரை கி.மீ. நீளமுள்ள பாலம் உள்பட தமிழ்நாட்டின் பெரும்பாலான பாலங்கள் அவர் ஆட்சியில் கட்டப்பட்டன. ஒன்றிய அரசில் தி.மு.க. பொறுப்பேற்றிருந்த காலத்தில் சென்னை கத்திப்பாரா மேம்பாலம், கோயம்பேடு மேம்பாலம் உள்ளிட்ட பாலங்கள் கட்டப்பட்டன. போக்குவரத்து வசதிக்கேற்ப சாலைகளையும் பாலங்களையும் சிறப்பாக அமைத்தவர் கலைஞர்.

## வண்ண விளக்குகளால் புதுப் பொலிவுடன் வள்ளுவர் கோட்டம்!



கலைஞர் கட்டிய வள்ளுவர் கோட்டம், அ.தி.மு.க. ஆட்சி அமையும் போதெல்லாம் பராமரிப்பின்றி பாழாக்கப்படும். திராவிட மாடல் ஆட்சியில் வள்ளுவர் கோட்டத்தைப் புதுப்பித்து, பொலிவு மிக்க கோட்டமாக மாற்றப் பட்டது. கோட்டத்து வளாகத்தில் பசுமையான பூங்கா, திறந்தவெளி அரங்கு ஆகியவற்றுடன் இரவு நேரத்தில் வள்ளுவர் கோட்டம் தேர் வண்ணவண்ண விளக்குகளால் ஒளிரும் வகையில் அமைக்கப்பட்டது.



## கோவை – ஜி.டி.நாயுடு மேம்பாலம்



சென்னை மேயராக இருந்த போதே 9 சிறு மேம்பாலங்களைக் கட்டி, நகருக்குள் போக்குவரத்து நெருக்கடியைக் குறைத்தவர் திராவிட மாடல் நாயகர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின். அவர் முதலமைச்சர் பொறுப்பேற்று, கலைஞர் வழியில் தமிழ்நாட்டின் பல இடங்களிலும் மேம்பாலங்களை கட்டினார். கோவையில் ஜி.டி.நாயுடு மேம்பாலம், சென்னை மத்திய கைலாஷ் மேம்பாலம் உள்ளிட்ட மேம்பாலங்கள் அவரது ஆட்சித்திறனால் நிறைவேற்றப்பட்டு, மக்களின் பயன்பாட்டிற்கு வந்தன.

## தொழில்வளர்ச்சிக்கான நெடும்பாதை







அறிவியல்தொழில்நுட்பத்தால் அதிவிரைவாக வளரும் தொழில்களுக்குத் தமிழ்நாட்டில் இடமளிக்க வேண்டும் என்பதற்காக 1971ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில தொழில் முன்னேற்றக் கழகம்(சிப்காட்) நிறுவனத்தை உருவாக்கியவர் கலைஞர். தமிழ்நாட்டின் அனைத்து மண்டலங்களிலும் சிப்காட் தொழிற்பேட்டைகள் உருவாக்கப்பட்டு, தொழில்வளர்ச்சி ஊக்கப்படுத்தப்பட்டது. இதனால் பன்னாட்டு நிறுவனங்கள் தமிழ்நாட்டில் முதலீடு செய்தன. ஹூண்டாய், ஃபோர்டு போன்ற உலகப் புகழ்பெற்ற கார் நிறுவனங்கள் தமிழ்நாட்டில் உற்பத்தியைத் தொடங்கி, தமிழர்களுக்கு வேலைவாய்ப்பை அளித்தன. சென்னையை இந்தியாவின் டெட்ராய்டு என்று பெயர் பெறச் செய்தவர் முத்தமிழறிஞர் கலைஞர். பன்னாட்டு நிறுவனங்களுடன் உள்நாட்டு நிறுவனங்களும் முன்னேற வேண்டும் என்பதற்காக சிறுதொழில் வளர்ச்சியைக் கருத்தில்கொண்டு தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக்கழகமான சிட்கோ நிறுவனத்தை கலைஞர் தன் ஆட்சிக்காலத்தில் உருவாக்கினார். பெரிய நிறுவனங்கள் தயாரிக்கும் கார்கள், கனரக வாகனங்கள் ஆகியவற்றுக்கு உதிரிபாகங்கள் தயாரிப்பதில் சிறு-குறு தொழில்நிறுவனங்களின் பங்கு முக்கியமானது. அதனை உணர்ந்து அவற்றை ஊக்குவித்து, தொழில்வளர்ச்சிக்கான நெடும்பாதை அமைத்து, வேலை வாய்ப்புகளை உருவாக்கித் தந்தது கலைஞர் தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழக அரசு.

## இல்லம்தோறும் பட்டதாரிகள்



முதல் தலைமுறை பட்டதாரிக்கு கல்லூரிகளில் ஒதுக்கீடு வழங்கி, கல்விக்கட்டணத்தை அரசே ஏற்கும் என அறிவித்தவர் முத்தமிழறிஞர் கலைஞர். அதன்காரணமாக ஒவ்வொரு வீட்டிலும் பட்டதாரிகள், டாக்டர்கள், இன்ஜினியர்கள், வழக்கறிஞர்கள் உருவாகும் நிலை ஏற்பட்டது. அதற்கேற்ப, தனது ஒவ்வொரு ஆட்சிக்காலத்திலும் உயர் கல்வி வளர்ச்சிக்கேற்ப புதிய பல்கலைக்கழகங்கள், அரசு கலை-அறிவியல் கல்லூரிகள், அரசு பொறியியல் கல்லூரிகள், மருத்துவக் கல்லூரிகள், வேளாண் மற்றும் சட்டப் பல்கலைக்கழகங்களை உருவாக்கினார். கல்விதான் ஒரு சமுதாயத்தின் வளர்ச்சிக்கு அடித்தளம் என்பதே திராவிட இயக்கத்தின் சமூக நீதிக்கொள்கை. அதனை நடைமுறைப்படுத்தும் வகையில் உயர்கல்வித் துறையை வளர்த்ததுடன், பள்ளிக்கல்வியிலேயே கணினிப் பாடத்திட்டத்தை அறிமுகப்படுத்தினார். தொழிற்கல்வி படிப்புகளுக்கான பொதுநுழைவுத் தேர்வை ரத்து செய்து, +2 பொதுத்தேர்வு மதிப்பெண்கள் அடிப்படையில் ஒற்றைச் சாளர முறையில் தங்களுக்கான கல்லூரியைத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பை மாணவர்களுக்கு வழங்கியது கலைஞர் அரசு.

## புதுமைப்பெண் திட்டம், தமிழ்ப்புதல்வன் திட்டம்




கல்வி சிறந்த தமிழ்நாடு என்பதை மெய்ப்பிக்கும் வகையில் திராவிட மாடல் ஆட்சியில் பள்ளிக்கல்வியில் இடைநிற்றல் இல்லாத நிலை உருவாக்கப்பட்டு, அரசுப் பள்ளியில் படித்த மாணவர்களின் உயர்கல்விக்கு மாதம் 1000 ரூபாய் வழங்கும் புதுமைப்பெண் திட்டம், தமிழ்ப்புதல்வன் திட்டம் மூலம் ஊக்கப்படுத்தியது. அரசுப் பள்ளிகள் ஸ்மார்ட் போர்டு வகுப்புகளாகி, மாணவர்கள் தங்கள் கற்றல் திறனை மேம்படுத்தி உலகளாவிய அளவில் சுற்றுப்பயணம் செல்லும் நிலை ஏற்பட்டது. நான் முதல்வன் திட்டத்தின் மூலம் கல்லூரி மாணவர்களின் திறன் மேம்படுத்தப்பட்டு, பெரிய நிறுவனங்களில் உயர் ஊதியத்தில் வேலைவாய்ப்பு பெற்றனர். மாணவர்களின் மறுமலர்ச்சிக்காலமாக திராவிட மாடல் அரசு திகழ்ந்தது.

## இரட்டை இலக்க வளர்ச்சியில் தமிழ்நாடு




தி.மு.க ஆட்சியை மக்கள் தவறவிடும் போதெல்லாம் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சி பின்னோக்கிப் போய் விடும். பத்தாண்டுகால அ.தி.மு.க. ஆட்சியில் அதல பாதாளத்திற்குச் சென்ற தொழில்வளர்ச்சியை, 2021ல் முதலமைச்சரான திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் மீட்டெடுத்தார். 1 பில்லியன் அமெரிக்க டாலர் என்ற இலக்குடன், 5 ஆண்டுகளில் 11.40 இலட்சம் கோடி முதலீடுகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டு, 35 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் வகையில் மின்வாகன உற்பத்தி, தோல் அல்லாத காலணி தொழிற்சாலை, மின்னணு சாதனங்கள் ஏற்றுமதியில் முதலிடம் என தமிழ்நாட்டின் தொழில்வளர்ச்சியின் மூலமாக பொருளாதாரத்தில் இரட்டை இலக்க வளர்ச்சி கொண்ட இந்திய மாநிலமாகத் தமிழ்நாட்டை உயர்த்தினார்.



## மாநகரம் முதல் குக்கிராமம் வரை போக்குவரத்து



பேரறிஞர் அண்ணா முதல்வராக இருந்போது, போக்குவரத்து துறை அமைச்சராக இருந்த கலைஞர், தனியார் உரிமத்தில் ஓடிய பேருந்துகளை நாட்டுடைமையாக்கினார். அண்ணா மறைவுக்குப் பிறகு முதலமைச்சரான கலைஞர், அரசுப் போக்குவரத்துக் கழகங்களை உருவாக்கினார். அதுவரை இலாப நோக்கில் மட்டுமே பேருந்துகள் இயங்கி வந்த நிலை மாறி, மக்களின் தேவைக்கேற்ப நகரங்களையும் கிராமங்களையும் இணைக்கும் வகையிலும், அவரவர் வேலைக்குச் செல்வதற்கேற்ற நேரத்திலும் பேருந்து வசதி உருவானது. தமிழ்நாட்டின் ஓர் எல்லையிலிருந்து மறு எல்லைக்குத் தடையின்றிப் பயணம் செய்யும் வகையில் நேரடிப் பேருந்துகள், இணைப்பு பேருந்துகள் இயங்கின. சென்னை மாநகரத்தின் வளர்ச்சிக்கேற்ப பறக்கும் ரயில் திட்டத்தை ஒன்றிய அரசிடம் வலியுறுத்திப் பெற்றதுடன், விரைவான-போக்குவரத்து நெருக்கடியில்லாத வகையில் மெட்ரோ ரயில் திட்டத்திற்கான கட்டமைப்புகளை உருவாக்கியவரும் கலைஞர்தான். தலைநகர் சென்னைக்கு மெட்ரோ ரயில் என்றால், மிகச்சிறிய கிராமங்களில் வசிக்கும் மக்களுக்காக மினி பஸ் திட்டத்தைக் கொண்டு வந்தவரும் கலைஞர்தான். இந்தியாவில் மிகச் சிறந்த பேருந்து போக்குவரத்தைக் கொண்ட மாநிலமாகத் தமிழ்நாட்டை மாற்றியவர் முத்தமிழறிஞர் கலைஞர்.

## மகளிர் உரிமை காத்த மாண்பாளர்









தனது ஆட்சிக்காலங்களில் பெண்களின் உரிமை சார்ந்த திட்டங்களையும், அவர்களுக்கான சட்டங்களையும் நிறைவேற்றியவர் முத்தமிழறிஞர் கலைஞர். தந்தை பெரியாரின் சுயமரியாதை இயக்க மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி, இந்தியாவுக்கே முன்னோடியாக குடும்பச் சொத்தில் பெண்களுக்கு சமஉரிமை அளிக்கும் சட்டத்தை 1989ஆம் ஆண்டு கலைஞர் அரசு நிறைவேற்றியது. அரசுப் பணிகளில் பெண்களுக்கு 30% இடஒதுக்கீடு வழங்கினார் கலைஞர். 1996ஆம் ஆண்டு உள்ளாட்சித் தேர்தலை மாநகராட்சி முதல் ஊராட்சிகள் வரை முழுமையாக நடத்தி, அதில் பெண்களுக்கு 33% இடஒதுக்கீடு வழங்கினார். ஆரம்பப் பள்ளிகளில் பெண் ஆசிரியர்களையே நியமித்தார்.

காலம் முழுவதும் ஆண்களையே சார்ந்து வாழும் நிலையைப் பெண்கள் தவிர்த்து, தங்கள் சுயமுயற்சியில் குடும்பத்தில் உள்ள ஆண்-பெண்-குழந்தைகள் அனைவரையும் காத்திடும் வகையில் மகளிர் சுயஉதவிக் குழுக்களை உருவாக்கினார். கருவுற்ற தாய்மார்களின் நலன் காக்க டாக்டர் முத்துலட்சுமி அம்மையார் பெயரில் மகப்பேறு உதவித் திட்டத்தை அறிமுகப்படுத்தி, பிரசவத்திற்கு முன்பு 3 மாதங்களும், பிரசவத்திற்குப் பிறகு 3 மாதங்களும் தாய்மார்களின் உடல்நலன் பேண ஊக்கத் தொகையும், சத்தான மருந்து மாத்திரைகளும் வழங்கிடச் செய்தார்.

ஏழைக் குடும்பத்து பெண்களின் திருமணக் கனவு நிறைவேறும் வகையில், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் பெயரில் திருமண உதவித் திட்டத்தை அறிவித்து, அதனைப் பெறுவதற்கான கல்வித் தகுதியையும் நிர்ணயித்து, பெண் குழந்தைகளை பெற்றோர் படிக்க வைக்கச் செய்து, திருமணம் செய்து கொடுக்கும் நிலையை உருவாக்கினார்.

விறகு அடுப்பில் நாளெல்லாம் வெந்த ஏழைக் குடும்பத்துப் பெண்கள் அதிலிருந்து மீளும் வகையில், இலவச கேஸ் அடுப்புடன் கூடிய இலவச கேஸ் சிலிண்டர் வழங்கும் திட்டத்தைக் கொண்டு வந்தார். உலக நடப்புகளை பெண்களும் அறிந்துகொள்ளவும், வீட்டு வேலைகளை முடித்து பொழுது போக்கிடவும் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டியை வழங்கியவர் கலைஞர். இதனால் பெண்களும், குழந்தைகளும் பிறர் வீட்டுக்குச் சென்று, தயங்கித் தயங்கி அங்கே டி.வி. பார்க்கும் நிலை மாறி, குடிசையிலும் சுயமரியாதையுடன் டி.வி. பார்க்கும் நிலை உருவானது.

## இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில்



கலைஞர் ஆட்சியில் மெட்ரோ ரயில் திட்டப் பணிகளுக்காக ஜப்பான் போன்ற நாடுகளுக்குச் சென்று நிதி ஆதாரத்தை திரட்டியவர் அப்போதைய துணை முதலமைச்சரான மு.க.ஸ்டாலின் அவர்கள். அவர் முதலமைச்சராகப் பொறுப்பேற்றதும், சென்னைக்கான இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் தடப் பணிகளை மேற்கொண்டார்.

ஒன்றிய அரசு நிதி தர மறுத்த நிலையிலும், மாநில அரசின் நிதியை ஒதுக்கி, தொய்வின்றிப் பணிகள் தொடர்ந்திடச் செய்தார். எளிய மக்கள் பயன்படுத்தும் பொதுப்போக்குவரத்தான பேருந்துகளின் கட்டணத்தை உயர்த்தாமல், மின்கலப் (பேட்டரி) பேருந்துகள், மாற்றுத்திறனாளிகள்-முதியோர் ஏறுவதற்கு வசதியாக தாழ்தளப் பேருந்துகள் என நவீனப் போக்குவரத்து வசதிகளை உருவாக்கித் தந்தார்.

## கலைஞர் மகளிர் உரிமைத் தொகை மாதம் 1000 ரூபாய்



கலைஞர் வழியில் தொடர்ந்த திராவிட மாடல் ஆட்சியில், குடும்பத்திற்காக நாளெல்லாம் பாடுபடும் பெண்களின் உழைப்பை மதித்துப் போற்றி, மாதம் 1000 ரூபாய் வழங்கும் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. நகரப் பேருந்துகளில் மகளிர் கட்டணமின்றிப் பயணம் செய்யும் விடியல் பயணம் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. கலைஞர் அரசு பெண்களுக்கு வேலைவாய்ப்பில் வழங்கிய 30% இடஒதுக்கீடு, திராவிட மாடல் ஆட்சியில் 40% ஆக உயர்த்தப்பட்டது. இந்தியாவில் பெண் பணியாளர்களின் எண்ணிக்கையில் தமிழ்நாட்டின் பங்களிப்பு மட்டும் 42% என்ற நிலைக்கு உயர்ந்தது.